RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s1963

OPEN ACCESS

# சங்க இலக்கியம் கட்டமைத்த சூழல் அறங்கள்

அ. ரம்யா [அ, *]

[அ] தமிழ்த்துறை, மங்கையர்க்கரசி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரவை, மதுரை-625402, தமிழ்நாடு, இந்தியா

# Virtues in Sangam Literature

A. Ramya [a, *]

[a] Department of Tamil, Mangayarkarasi College of Arts and Science for Women, Paravai, Madurai-625402, Tamil Nadu, India

* Corresponding Author: mramyamuruganm@gmail.com

Received: 12-08-2022
Revised: 03-10-2022
Accepted: 28-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Virtue is derived conceptually and is changeable according to the change of time. Moral values are different for man who lived as an ethnic group and for an individualistic society. This article shows up how the virtues mentioned in Sangam literary songs new shape for the sake of necessity. A materialistic society constructs virtue according to the occupation, materials, eligibility etc. A man accepts and reject a thing based on his knowledge of virtue. In the struggle for life, the commonality has been distorted based on the ideas of labor and surplus. This article describes the virtues of war, which are intended to destroy the generality and about the government virtues that emphasize power.

**Keywords:** Sangam Literature, Moral Values, Occupation, Materials

## முன்னுரை

அறம் என்பது கருத்தியல் சார்ந்த நிலையில் பொதுமைப்படுத்தப்படுகிறது. உலகில் வாழும் உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அறங்கள் போதிக்கப்படுகின்றன. அவ்வறங்கள் காலத்திற்கு ஏற்பவும் சூழலுக்கு ஏற்பவும் மாறும் தன்மை கொண்டவை. புராதனப் பொதுவுடைமைச் சமூகத்தில் அறம் என்பது ஒட்டுமொத்த மக்களுக்கும் உரியதாக இருந்தது. ஆனால் பொருள் சேகரிப்புச் சமுதாயத்தில் தொழில், பொருள், தகுதி போன்றவற்றிற்கு ஏற்பக் கட்டமைக்கப்படுகிறது. எனவே அறம் என்பது பொதுமையாக இருந்த நிலைமாறி தனிமனித வழிப்பட்ட சிந்தனையாக உருவெடுத்தது. தனிமனிதனின் தேவையின் பொருட்டு அறமானது புதுப்புது வடிவமெடுக்கிறது. மொத்தத்தில் அதிகாரத்தேவையைப் பூர்த்தி செய்யும் போக்கிலேயே அறம் தன்னைத் தகவமைத்துக் கொண்டது என்பதை இக்கட்டுரை வழியே காணலாம்.

## புராதனப் பொதுவுடைமை வழிப்பட்ட அறம்

தொன்றுதொட்டே மனிதன் பல்வேறுபட்ட இனக்குழுவைச் சார்ந்தவனாக இருந்தான். மனிதனது ஆரம்பக்கட்ட வளர்ச்சிக்கு அடிப்படையாக அவனது கையே உறுதுணையாகச் செயல்பட்டது. இயற்கை வழிப்பட்ட மனிதனின் செயல்பாடு இயற்கையின் கட்டுக்குள்ளேயே இருந்தது. பின்னர் இது படிப்படியாக வளர்ந்து மனிதனின் தனிப்பட்ட சிந்தனைக்கு உட்பட்ட அதிகார வர்க்கங்களை

உருவாக்கியது. அதாவது மனிதனின் பொருள் உற்பத்திச் சிந்தனையும், உபரியும் அதிகார நிலைகளைக் கட்டமைத்தன. புராதனப் பொதுவுடைமையாக மாற்றம் பெற்றன. அங்கு ஏற்பு மற்றும் நிராகரிப்பு என்பது குழுவைச் சார்ந்தவையாக இருந்தன. அவை பொதுமை நிலையிலேயே அமைந்தன. வாழ்க்கைப் போராட்டத்தில் எத்தனை இன்னல்கள் நேரிட்டாலும் குழுவாகவே இணைந்து செயல்படுவர். இயன்றோர் இல்லாதோர் என்ற வேறுபாடு கிடையாது. உழைப்பு, உபரி என்ற கருத்தியல் நிலையில்தான் பொதுமை என்பது சிதைக்கப்படுகிறது. குழுவாக வாழ்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்த மனிதன் கூடி வாழ்ந்தாக வேண்டும் என்ற சூழலுக்கு உந்தப்பட்டு வழிகாட்டு நெறிகளை உருவாக்கியுள்ளான். அவை அவனுக்கான அறங்களாகக் கட்டமைக்கப்படுகின்றன.

உதாரணமாகத் தலைவன் பொருளீட்ட வேண்டும் என்பது வாழ்வியலுக்குத் தவிர்க்க இயலாத ஒன்றாகும். சமூகச் சிக்கலில் இருந்து விடுவிக்கும் பொருளியலுக்கான அறத்தை வகுக்கத் தலைப்பட்டான். எனவே தனக்கு நேரக் கூடிய இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒப்பீடு செய்து பொருளீட்ட நாடு கடந்து செல்வதை,

"நட்டோ ரின்மையும் கேளிர் துன்பமும்

ஒட்டா துறையுநர் பெருக்கமும் காணூஉ

ஒருபதி வாழ்தல் ஆற்றுபதில்லை"

என்று எண்ணும் தலைவன் கூற்றை அகநானூறு சுட்டுகிறது. பொருளீட்டுதல் என்பதன் முக்கியத்துவத்தைத் தனக்கான அறமாகக் கைக்கொள்வதை இவ்வடிகள் உணர்த்துகின்றன (Somasundranaar, 1979).

## நிலத்தால் கட்டமைக்கப்பட்ட அறங்கள்

நிலத்தையும் காலத்தையும் பிற இயற்கைப் பொருள்களையும் பகுத்துப் பற்பல பிரிவுகளைக் கண்ட மக்கள் தனித்து வாழ்ந்ததில்லை. நாகரிகம், பண்பாடு அறியாத காலத்திலேயே காடுகளிலும் மலைகளிலும் கூட்டம் கூட்டமாக வாழ்ந்திருந்தார்கள். குடும்பமோ, மனைவி மக்களோ அவனுக்கென்று தனி உரிமையுடன் அமையாத காலத்தில் பசித்த போது வேட்டையாடி விலங்குகளைக் கொன்று தின்றனர். பின்னர் வேட்டைக்கு உதவியான விலங்குகளைப் பிடித்துப் பழக்கித் தனக்கு உதவியாக வைத்திருந்த காலத்தும் நிலைத்த வாழ்வு நடத்த இயலவில்லை. அங்கும் இயற்கை மீது அவன் கொண்ட பற்றுதல் பல்லுயிர் போற்றும் அறமாக அமைகிறது.

"மரங்கள் ஊடாடும் காட்டுப்பகுதியில் சென்ற தலைவன் மீள வரும்போது அழகிய மணிகள் பூட்டப்பட்ட தேரில் விரைந்து வருகிறான். வரும் வழியில் தேனை உறிஞ்சி உண்ண தேன் சிட்டுகள் அலைபாய்ந்து கொண்டிருக்கின்றன. தலைவனின் தேரின் மணிகள் பெரும் இரைச்சலாகிறது. அதைக் கேட்ட பறவைகள் சிதறுகின்றன. தலைவன் தன் தேரோட்டியிடம் மணிகளின் நாக்குகளை எடுத்துவிடும்படிச் செய்கிறான். அவனின் விரைந்த பயணம் தொடர்கிறது (Somasundranaar, 1979).

அகநானூற்றில் இக்காட்சி பாடலில் இடம்பெற்றுள்ளது. தேன் சிட்டுகளுக்குத் துன்பம் தரக்கூட மனமின்றித் தன் தேரின் மணி ஒலியைத் துறந்த இச்செய்தி, மனிதன் இயற்கையை நேசித்தமையையும் அதனோடு இயல்பாக உறவாடுவதும் நல்வாழ்க்கைக்கு வழிவகுக்கும் உயரிய அறமாகப் பார்க்கப்பட்டுள்ளது. "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்ற அறத்தினை வள்ளுவரும் கோடிட்டுக் காட்டுகிறார் (Puliyur Kesigen, 2010). இவ்வாறு உலகில் வாழும் எல்லா உயிரிகளும் இயற்கையைச் சார்ந்த சூழலில் தனக்கான பணியைச் செவ்வனே செய்து கொண்டிருந்தன.

இயற்கையைச் சார்ந்துவாழ்ந்த மனிதனின் தேடல் நாகரிகம் என்ற போர்வைக்குள் சிக்கியது. அறிவால் உணரத் தலைப்பட்ட மனிதனின் பேராற்றல் இயற்கை சார்ந்த நிலையில் கொண்டிருந்த பற்றுதலில் சில அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. இயற்கைக்கு ஏற்ப வாழ்ந்த தன் தகவமைப்பினை மாற்றிக் கொண்டு இயற்கையைத் தனக்கானதாகத் தகவமைத்துக் கொண்டான். நிலப்பகுதிகளுக்கு இடையே நிகழ்ந்த சமச்சீரற்ற வளர்ச்சி நிலைகளே இங்கு அறமாகக் கட்டமைக்கப்படுகின்றன. அகம்

சார்ந்த நிலையிலும், புறம் சார்ந்த நிலையிலும் நில அடிப்படையிலான அறங்களே முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இவை புராதனப் பொதுவுடைமைச் சமூகம் ஆகையால் பொருளாதாரச் சூழலை மையமிட்டதான அறமாகவே பார்க்கப்படுகிறது. வீரனொருவன் தன் வீரத்தை வெளிக்காட்ட மேற்கொள்ளும் போர் நடவடிக்கையானது இப் பொருள் ஆதாரங்களைத் தன்னகப்படுத்த எண்ணும் போர் அறமாகவே அமைகிறது.

## போர்ச்சூழலில் கட்டமைக்கப்பட்ட அறங்கள்

போர் என்பது வெற்றி தோல்வி என்ற இரு சொற்களோடு முடிந்துவிடுவதில்லை. வெற்றி தோல்வி இரண்டையும் கடந்ததான அறங்களை வகுக்கிறது அதன் விளைவுகள். "நாகரிகம் மேலிட்ட நவீன யுகத்தில் பகைநாடு அழிக்கப்படுதல், அதாவது பகை நாட்டினரின் வாழ்வாதாரங்களைச் சிதைப்பது என்பது அறமாகக் கருதப்பட்டுள்ளது". காலப்போக்கில் பகைநாட்டின் வாழ்வாதாரங்களை அழித்து அந்நாட்டில் உணவுப் பஞ்சத்தைத் தோற்றுவித்தல் போர் முறையாகவே மாற்றம் பெற்றது (Sivathambi, 2004). இதைச் சூழலியலாளர் முன்வைக்கும் நில மாசுபாட்டோடு தொடர்புபடுத்த முடியும்.

"அடர் புகாச்

சிறுகண் யானை செவ்விதின் ஏவி

பாசவல் படப்பை ஆர்எயில் பலதந்து"

என்ற இப்பாடலில் சிறிய கண் உடைய யானையைத் தடையில்லாது ஏவிப் பசிய விளைவயல்களையும், உயர்ந்த மதில் அரண்களையும் அழித்துள்ளனர். இது பகைமை என்ற நிலையில் அறமாகச் செயல்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. இது பகை மன்னனின் வாழ்வியலோடு தொடர்புடைய அறமாக அமைகிறது. ஒருவனின் பொருளியலை மையமிட்ட அறமானது சூழலைச் சிதைவுபடுத்தும் நிலையில் மறமாக மாறிவிடுகிறது (Subramaniyan, 2012).

மேலும்,

"புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்

வெள்உளைக் கலிமான் கவிகுளம்பு உகளத்"

என்ற பாடலில் பகைவர் உணவிற்காக விளைவயலானது சிதைவுபடுத்தப்பட்டன என்பதை உணர முடிகிறது (Subramaniyan, 2012). இதன்மூலம் போர்ச் சூழலிலான அறம் என்பது நிலத்தை மலடாக்கிய பகைமையின் குறியீடாகவும், அறத்தைக் கட்டமைக்க மறமானது கையாளப்பட்ட திறத்தையும் எடுத்துரைக்கிறது. மொத்தத்தில் சூழல் அழிவுக்கும், சிதைவுக்கும் முக்கியக் காரணியாகப் பகைமை அறம் கையாளப்பட்டுள்ளது.

## நீரினால் கட்டமைக்கப்பட்ட அறம்

சூழலியல் குறித்த முன்னெடுப்பில் முன்நிற்பது தண்ணீர் ஆகும். "தண்ணீர் வணிகப் பொருளாகிப் போனதும், மூன்றாம் உலக யுத்தம் நிகழ்வதற்கான மையப் பொருளாகிப் போனதும் சூழலியல் குறித்ததான அறமாக முன்னெடுக்கப்படுகிறது". தண்ணீர் என்பது வறுமையோடு தொடர்புடையதாக்கப்படுகிறது (Subrabharathi Maniyan, 2013). உலகில் வாழும் ஒவ்வொரு உயிரிகளுக்கும் உரிய அறத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறது. ஏனெனில் இயற்கைக்குக் கேடு நிகழா வண்ணம் பயன்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டால். தீங்கு நேர்வதில்லை. சங்க இலக்கியங்களும் நீர் வளத்தை மையப்படுத்தியே நில உயிர்கள் அனைத்தும் வாழ்கின்றன என்பதையும், அதன் சிறப்பினையும் எடுத்துக் கூறுகின்றன. மழைநீர் தொடங்கி அனைத்து வகை நீர் நிலைகளையும் பயன்பாட்டு அறமாக எடுத்துரைக்கின்றன. மழையினால் பல்லுயிர்ப் பெருக்கம் பாதுகாப்பபடும் அறத்தினை,

“வானம் பொழுதொடு சுரப்பக் கானம்

தோடுறு மடமானேறு புணர்ந்தியலப்

புள்ளு நிமிறு மாச்சினை யார்ப்ப

பழனங் கழங்கு மிசையிற வறியாது

பல்லான் என்பிரை புல்லருந் துகளப்

பயங்கடை யறியா வளம்”

என்ற பாடலில் உணர்த்துகின்றன (Subramaniyan, 2012). உயிர்கள் வாழும் புவிப் பரப்பில் நிலத்தடி நீரை நன்னீர், உவர்நீர், உறைநீர் (பனி), மழைநிர், நீராவி எனப் பல்வேறாக இருந்தாலும் அனைத்தும் பயன்பாட்டிற்கு ஏற்தல்ல என்பதை,

“வான்முகந்த நீர் மழைப் பொழியவும்

மழை பொழிந்த நீர் கடல்பரப்பவும்

மாரி பெய்யும் பருவம் போல

நீரின்று நிலத்து ஏற்றவும்”

எனப் பட்டினப் பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகிறார். இவ்வாறெல்லாம் பாகுபடுத்திய சங்கத் தமிழன் நீரைச் சேமிக்க வேண்டும் என்பதையும் அதன் நிலைக்களன்களையும் உரிய வகையில் எடுத்தியம்பியுள்ளான் (Subramaniyan, 2012).

மழைநீர் அல்லது ஆற்று நீரைத் தேக்கி ஏரி, குளம், குட்டை போன்ற இடங்களிலும் மடு, மதகு, அணை போன்ற இடம் அமைத்து அதில் நீரைச் சேமிக்கும் முறையை,

“நெடு விளிக் கோவலர் கூவல் தோண்டிய” (Somasundranaar, 1979)

“வையை உடைந்த மடை அடைத்த கண்ணும்”

என்பதை நீர் குறித்த எச்சரிக்கை அறத்தினை வலியுறுத்துகின்றனர் (Subramaniyan, 2012).

மேலும்,

“நீரும் நிலனும் புணியோரின்

உடம்பும் உயிரும் படைதினோரே”

என்ற வரிகளில் நீரின் பயன்பாட்டை உணர்ந்து நீர் மேலாண்மை செயல்படுத்தியமையை அரச அறமாகவே வகுத்துள்ளனர் (Subramaniyan, 2012).

இவ்வறங்கள் யாவையும் மறத் தன்மையுடன் செயல்படும்போது இயற்கையின் மீதான அதிகார அரசியலைப் புகுத்துகிறது.

“கடி மரத்தாற் களிறணைத்து

நெடுநீர் துறை கலங்க”

என்ற வரிகளில் போரின் போது நீர்த்துறையை மாசுபடுத்திய தன்மையை அதிகாரத்தின் அறமாகக் குறிப்பிடுவதை அறியமுடிகிறது (Subramaniyan, 2012).

## முடிவுரை

சமூகத்தில் ஏதாவதொரு சிக்கல் முதிர்ந்து நிற்கும்போது அதற்கேற்ப இலக்கியக் கல்வியும் செயலாற்ற நேர்கிறது. இலக்கியங்களில் சொல்லப்படாத கருத்துக்களே இல்லை என எண்ணுமளவிற்கு கருத்துக்கள் குவிந்து கிடக்கின்றன. சங்க இலக்கியமும் அதற்கு விதிவிலக்கல்ல. உணவுக்காகவும்

மற்ற செயல்பாடுகளுக்காகவும் விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடி இருப்பினும் இயற்கையின்மீது மிகுந்த ஈடுபாடு கொண்டு பல்உயிரியப் பதிவுகளையும் முன்னிறுத்துகின்றனர். வாழ்க்கையின் அனைத்து வடிவங்களிலும் இயற்கையைச் சார்ந்த மனிதன் தன் தேவை கருதிய நிலையில் இயற்கையையே ஆதிக்கம் செலுத்த முனைந்தான். விளைவு பொருளாதார வளங்களைத் தன்னகப்படுத்தும் போர் முறையாக உருவாக்கம் பெற்றது. அவையாவையும் சூழலால் கட்டமைக்கப்பட்ட மற்றும் பொதுமைப்படுத்தப்பட்ட அறங்களாக அமையும் தன்மையை அறியமுடிகிறது. மேலும், தனிமனித வளர்ச்சிக்காக அதிகாரம் என்ற நிலையில் அவ்வறங்கள் கட்டுடைக்கப்பட்டமையையும் இக்கட்டுரை புலப்படுத்துகிறது.

## References

Puliyur Kesigen, (2010) Thirukkural, Paari Nilaiyam, Chennai, India.

Sivathambi, K. (2004) Pandaiya Tamil Samugathil Nadagam, Makkal Veliyeedu, Chennai, India.

Somasundranaar, P.V. (1979) Aganaanooru (Kalitruyaanai Nirai), Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Subrabharathi Maniyan, (2013) Suzhal Aram, Valaithala Katturai, Chennai, India.

Subramaniyan, Sa.V. (2012) Pathenen Keelkanaku Noolgal, Manivasagar Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License